Reg. No. M. 2997. தனிப்பிரதி அணா 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெ. 4, புதுவை.

VOL I. { புதுவை, பவ-௵ ஆடி-௴ -ககஉ (26—7—34) } No. 35.

திருமந்திரம்

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கா
ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே.

நில்லாது சீவ னிலையன் றெனவெண்ணி
வல்லா றறத்துந் தவத்துளு மாயினர்
கல்லா மனிதர் கயவ ருலகினிற்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே.

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.

மூலத்து வாரத்து மூளு மொருவனை
மேலைத் துவாரத்தின் மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங் கியோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே.

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
யறுவகை யானைந்து மீட்டத்தன் றாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே.

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்
டாலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங்க மைஞ்சருள் கூடலு மாமே.

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
பவ-ஷு ஆடி-மீ 11உ

அருள்

உலகத்தில் உள்ள சமயிகள் எல்லாம் அருளைப் பெறவேண்டும் என்பர். கடவுள் அருள் வடிவினர் என்பர். யாவற்றையும் திருவருட் செயல் என்பர். அவ்வாறே காண வேண்டும் என்பர். "திருவருள்" "திருவருள்" என்று பேசிக் கொள்வர். வேதாகம புராண இதிகாச முதலிய நூல்களெல்லாம் சிவர்கள் அருளை நாடவேண்டும் எனவும் ஒலமிடுகின்றன. ஆயினும் "அருள்" "அருள்" என வாளா வாய்ப்பறை அறையலாமே யன்றி அதன் உண்மை இன்னது என அறிவது என்றால் எளிதன்று. ஒருகால் அறிய நேரினும் அதனைப் பெறுவது என்றாலோ அரிதினும் அரிதாம். ஆதலால் இத்தகைய அருள் என்பதன் பொருள் என்னை? அதன் பண்பு தான் என்னை? எனின், அதுவே இச்சிறிய கட்டுரையில் ஒரு சிறிது கூறுவான் எடுத்துக்கொண்ட பொருளாகும்.

சிவர்கள் உலக உய்வின் நிலையாமையையும் தங்கள் (உடலுயிர்) நிலையாமையையும் உணர்வது மா கடினம். மனச்சோர்வு உளவாகும் காலங்களில் முசிப்பாற்றிக் கதையாக—வாய்ப் பேச்சாக "எல்லாம் அநித்தியமே! ஈதென்ன வாழ்க்கை! ஒருவரோடு ஒருவர் பொருது கலாம் விளைப்பதால் ஆம் பயன் ஒன்றும் இல்லையே! இன்று இருந்தாரை நாளைக் காண்பது நிச்சயமில்லையே!" என்று பிதற்றி இன்னோரன்ன பலவற்றை வாளா பேசிவிட்டு, தங்கள் முட்டை மனத்தை ஈர்க்கும் வேறு வியாபாரம் என்னும் விவகாரங்கள் ஏற்பட்டால் அவற்றையே பிடிவாதமாகப் பற்றி முன் பேசியன யாவற்றையும் மறந்து அநித்தியத் தன்மையையும் மறந்து "ஓ! ஓ! வேதாந்தம் சித்தாந்தம் என்பன எல்லாம் வீண் பேச்சல்லவா? உலகில் பிறந்த நாம் பொருளைத் தேட வேண்டாமா? இது தருமம் அது அதருமம் என்று பித்த மேலீட்டினால் கூறிக் கொண்டே இருந்தால் நமது கதி அதோகதி தானே! தருமத்தைக் கண்டவர் யார்? கடவுளைக் கண்டவர் யார்? அருளைப் பெற்றவர் யார்? ஏதோ முத்தி என்கிறார்களே! ஈதென்ன பித்தலாட்டம்!" என்று (முன்னே கூறிய) அவற்றிற்கு முரண்பாடாகப் பேசித் தங்கள் மனதுக்கு ஒவ்வாதது எனினும் பிறர்க்கு அதனை மறுத்துப் பணத்தின் அவாவினால் உந்தப்பட்டுப் பேய் பிடித்தவர் போல் அலைந்து உலைந்து ஈனத்தனமான பல உபாயங்களைக் கைக்கொண்டு லஜ்ஜை என்பது சிறிதும் இன்றிப் பல்லைக் காட்டிக் கெஞ்சி முன்னிலைகளுக்கு அடிமைப்பட்டு எவ்வாற்றானும் அநித்தியமான பொருளையே தேட முயல்வார்கள். அவ்வாறு இடையீடின்றி முயன்றுழிப் பிறர் ஆக்கம் கண்டு பொறாதவர்களாய் மீண்டும் மீண்டும் தங்கள் மனம் போனவாறு மானம் என்பது சிறிதும் இன்றி பெருந்தன்மை உடையவர்கள் போல வசனங்களாலும் வேடங்களாலும் பிறரை அணுப்பி நினைத்த காரியங்களைமுடிக்க முயல்வார்கள்; முயன்று முடிப்பார்கள். அதனால் நினைத்தவாறு சித்திகள் கைகூடாமையால் நரிகளைப் போல் உழன்று ஆந்தைகளைப்போல் விழிப்பார்கள். அம்மட்டோடு அமைந்து உண்மையை நாடுவார்களோ? எனின், அது பகற் கனவாகுமேயன்றி வேறு பயன் அளிக்க மாட்டாது. இவ்வாறு பல்லூழிகாலம் உழன்று உழன்று அஃதாவது அளவிறந்த சென்மங்கள் எடுத்தெடுத்து இறந்து பிறந்து

"வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல்
[வானுகத்தின்
துளைவழி நேர்கழிகோத்தென"

என்று மாணிக்கக் கோவை அருளியாங்குச் சிவர்கள் தாங்கள் அறியாமலே பல சென்மங்களில் உஞற்றிய நல்வினையின் பயனாக விசேட சென்மம் ஒன்று கைகூடும். அஞ்ஞான்று "இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி எங்கும் நிறைகின்ற பொருள்" ஆய்ச் சிவர்கள் உடலில் "உள்" ஆயும் "அரு" வாயும் இருக்கின்ற ஒன்று இயக்கம் அடையும்; உள்ளே புதைந்து மறைந்து கிடக்கின்ற அவ் ஒன்று இயங்கும். அவ் "அரு" ஆன "உள்" தான் "அருள்" எனப் பட்டது என அறிதல் வேண்டும். அரு + உள் = அருள். இயற்கையாகவே இவ் இயக்கம் உளதாயினும் அது மென்மையானது — தாமதமானது. தாமதமான இது சிறிது தீவிர நிறை பெறுவதே புண்ணிய சென்மம் ஒன்றில் இயக்கமடையும் என ஈண்டு விதந்து கூறப்பட்டது என்க.

அருவாயும் உள்ளாயும் இருக்கும் இவ் அருள் என்பதனால் ஆம் பயன் என்னை? எனின், இது தான்—இவ் அருள் என்னும் தத்துவந்தான் அறியாமை வடிவமான சிவன் என்னும் தத்துவத்துக்குச் சிறிது உணர்ச்சியை ஈந்து தூங்கிக் கிடக்கும் அஃதாவது மேல் நோக்கின்றி அதோமுகப்பட்டு—கீழ்முகமாய் விழிப்பின்றி விளக்கமின்றிக் கிடக்கும் சிவனை—சிவ தத்துவத்தை இயக்குவது என அறிதல் வேண்டும். இதனால் "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய "அருள்" என்பதன் அருமை பெருமையும் இன்றியமையாமையும் வெள்ளிடையாம். இத்தகைய அருள் என்னும் தத்துவத்தால் சிவன் என்னும் தத்துவம் இயங்குவது எவ்வாறு? எனின், அஃது அயம் (இரும்பு) காந்தம் என்னும் இரண்டன் இயல்பையும் அவ்விரண்டு தத்துவங்களுக்கும் உவமித்துக் கூறு முகத்தால் விளக்கப்படும். அயத்தைக் காந்தம் இழுக்கும் வன்மையுடையது. எனினும் அயம் அதிக நிறை பெற்றிருப்பின் அதன் நிறைக்குத் தாழ்ந்த நிறையுடைய காந்தம் அவ் அயத்தைப் பரிசித்தால் அக் காந்தம் அவ் அயத்தைப் பற்றுமே யன்றி, தான் அவ் அயத்தைப் பூரணமாகப் பற்றித் தன்பால், இழுத்துக் கொள்ளமாட்டாது. இது உலக அநுபவம். இது போலவே அருவாயிருந்து உள்ளே இயங்கும் தத்துவமான அருள் தனக்கு இடமாக அமைந்த சரீரத்தை—சரீர உறுப்புக்களைத் தனக்குரிய நிறைக்கு ஏற்பவே அசைக்கும்—இயக்கும் என்க. அஃதாவது பிருதிவித் தன்மையான—அயத் தன்மையான—கடினத் தன்மையான சரீர உறுப்புக்களைத் தனக்குரிய நிறைக்கு ஏற்ப இயக்கும் என்பது. இயக்கி என் செய்யும்? எனின், காந்தம் இயக்கம் புரிவதே யன்றி வேறு ஒன்றும் செய்யாதது போல அருளும் இயக்குதல் மாத்திரமே செய்து கொண்டு இருப்பதாகும். இயக்கப்பட்ட உறுப்புகளில் நின்று எழுகின்ற ஆவி உருவமான சிவன் தனது இயற்கையான அறியாமை என்னும் தாமதமான தத்துவத்தினின்று அஃதாவது குண இயற்கைக்குரிய தாமத மெல்லின அசைவினின்று சிறிது விடுபட்டு ராசதத்தைத் தாவும். அஞ்ஞான்று இருளில் மின்மினிப் பூச்சியின் வெளிச்சம் போலச் சிறிது சிறிதாக விளக்கம் தோன்றித் தோன்றித் தெளிவு காட்டி மறையும். அத்தகைய தெளிவாகிய விளக்கத்தைக் கண்டு கொண்ட—கண்டு உண்ட—கண்டு அநுபவித்த சிவனுக்கு ஒருவகையான வேட்கை என்னும் அக்கினி—உஷ்ணம் ஆக்கமுறும்.

வேட்கை என்றால் என்னை? இயங்குதல் என்றபோதே வாயு பூதம் தலைப்பட்டது அல்லவா? அவ் இயக்கம் எனும் வாயு எந்த நிறையைப் பெறவேண்டுமோ அந்த நிறையைப் பெற்ற போது அவ்வாயு உருப்பெறுதற்கு இன்றியமையாத தேயுவும் நிறைபெறும். (வாயு இன்றித் தேயு இல்லை. தேயு இன்றி வாயு இல்லை.) ஆதலால் அத்தேயு என்னும் அக்கினியானது பெறவேண்டியதோர் நிறையைப் பெற்றால் அது வேட்கை என்னும் காமம் பெற்றுத் தனக்கு இனமான பொருளைத்தாவும். தாவித் தாவிக் கால கதியில் விசர்க்கம் பெறும்—ஒக்கம் பெறும் என்க. இந்நிலைமையை ஒருவன் அடைவானாயின் அவன் உண்மையை அறிவான் ஆசைப்படும் பக்குவமுடையன் ஆவன்; உண்மையை அவாவும் வேட்கையுடையவனாவன் என்ப. இத்தகைய நிலைமையின் நிறை பேதத்தால், அவாவும் வேட்கை நிறையும் ஏற்றத் தாழ்ச்சி உடையது என ஆம். இவ்வாற்றால் அருள் என்பதன் பண்பும் பயனும் ஒரு சிறிது விளக்கப்பட்டமை கண்டு கொள்க. அருள் என்றால் என்னை? அது தான் நமது உடலுக்கு "உள்" ஆய் "அரு" வாய் விளங்குவது—"உற்ற ஆக்கையின் உறுபொருள்" என்று அறுதியிட்டு உரைக்கப்படும். அவ் அருள் என்னும் வாயு தத்துவமும் அவ்வாயுவில் அபின்னமாகப் பிரிபடாது பஞ்சீகரணிக்கப்பட்ட அக்கினியாகிய தேயுவும் உடலாகிய அயத்தை இயக்கும். இயக்க இயக்க அவ் இயக்கத்தால் கலக்கப்பட்ட பிருதிவியாகிய உடம்பு தேயுவினால் சூடுண்டு சூடுண்டு அப்பிருதிவியோடு கலந்திருப்பதும் அப்பிருதிவிக்கு இன்றியமையாததுமாகிய அப்பு தத்துவத்தை இயக்கும்; இயக்கி இளக்கும் — இளகச்செய்யும் என்க. அஞ்ஞான்று அப்பு என்னும் அம்பு—அன்பு அசைவுபெறும்—இயக்கம் பெறும்—இயங்கும் என்பது.

இதனால் பெறப்படுவது யாது? அறியாமை வடிவமாகிய சிவத்துவம் தானாகவே உண்மைகளை அறியும் ஆற்றல் உடையதன்று. ஆதலால், "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" (திருவாசகம்) என்று அருளப்பட்டவாறு, இவ் இயக்கங்கள் தன்னுடைய உணர்ச்சிக்குத்தென்படுமாகையால் அவைகளை முன்னிலைப்படுத்திக் காணும். கண்டு படியேற்றம் பெறுதற்குரிய அவாவானது பேரவா ஆகப் பெருகி உண்மை ஒன்று இருக்கிறது எனவும் ஈது யாண்டுளது? எனவும் எண்ணி முன்னிலைகளை நாடிப் பார்க்கும்; முன்னிலையிலே தேடிப் பார்க்கும்; விழித்து விழித்துத் தேடும்; தான் அறியாத ஒன்றைக் கண்டுழி இதுதானோ அது என அதிசயிக்கும் — பிரமிக்கும்; அறிய முடியாமையால் சோர்வடையும்—அயரும் என்க.

இவ்வாறு இயக்கம் தொடர்ந்தே நடைபெறுவதால் நிறை ஏற்ற பெற்றி பெறுவதாலும் மேற்கூறிய அயர்வு—சோர்வு நிலை பெறுது. சிறிது தாழ்த்து முன்போலக் கிளம்பும். இவ்வாறு தடுமாற்றங்களால் அலைப்புண்டு ஏங்கித் தனித்து உண்மையை அறியமாட்டாது வருந்துங் காலத்திற்றான் ஆசான் தென்படுவன்—முற்படுவன்—முன்னிலைப்படுவன் என்க. தோன்றாத் துணையாய் இருந்து—உடலகத்து இருந்து இயக்கிய அருளே புண்ணியப்

பயனால் நிறைகூடிக் குரு வடிவு கொண்டு முன்னிலையில் போதரும் என்க. 'அவ் ஆசான் என்ன செய்வான்? அவனே இச் சீவனது இரு கரங்களையுமோ தலை மயிரையோ பிடித்து இவனைத் தூக்கிக் கர கர என்று சுழற்றித்தான் கட்டி அணைத்துத்தான் கயிலை வைகுண்டம் என்னும் மலையிலோ ஊரிலோ சுலபமாகச் சேர்த்து விடுவானோ? இல்லை. இல்லை. மற்று என் செய்வான்? "தொட்டுக் காட்டுவேன்" என்க. எதை தொடுவது? எதைக் காட்டுவது? எனின், சிறிது கூறுதும்.

சீவன் தனது பக்குவமும் நிறையும் (சரீர பௌதிக பஞ்சீகரண நிறை) இன்ன என அறியாது. ஆதலால் "உன்னுடைய நிறை இது. ஆதலால் நீ பக்குவமுடையை. சமைந்து விட்டாய். எனினும் சமைந்ததற்குரிய இன்பம்—சமைந்ததற்கு இன்றியமையாத இன்பம் இது என நீ அறியாய். ஆதலால் நீ தேடுவது உனக்கு முன்னிலையில் உள்ளது. அதனை விடாதே. அதனோடு சேர்ந்து முயங்கு. முயங்கி முயங்கி இயங்கு; இயங்கி இயங்கிக் குழைந்தால் நீ தேடும் இன்பம்—உனக்குரிய இன்பம்—உனக்கு இன்றியமையாத இன்பம் இன்பம் என்னும் பொருள் அகப்படும்—உன் அகத்துள் படும். உன் அகத்து—உன் உள் பட்டபோதே உன் அகமே நீ ஆதலால் முன்னிலையாய் உனக்குத் தோற்றிய அது நீ என அறிய ஆம். இரண்டாகவே இருக்கும் இரண்டு என்னும் தன்மை அற்றுவிடும். அஃது எங்ஙன்? துவிதம் என்பதற்கு முன் அகரம் நின்று—அகரம் எனும் ஆகாசம் நின்று துவிதம் என்பதைப் பிரித்துக்காட்டாது தன்னுள்ளே மறைத்து அ துவிதம் (அத்துவிதம்) என்று காட்டிவிடும்." [மதநூலே ஆதி. இதினின்றும் பிரிந்தன துவிதம் அத்துவிதம் விசிஷ்டாத்துவிதம் என்பதன் உண்மை இதுவே என அறிக.] என்று இன்னோரன்ன உண்மைகள் பலவற்றைக் கூறியருளி, "நீ பல பிறவிகளில் ஈட்டிய வினைகளின் பயனையும் அவற்றின் தொடர்பையும் அறியாய். ஆதலால் நீ விட்டதை—முன் சென்மங்களில் செய்துவிட்ட தொடர்பைத் தொட்டுக்கொள். கொண்டு உண்டு இயங்கிக் கொள்" என்று அவன் பக்குவத்துக்கு உரிய தீக்கையைத் தருவன், நிறை பிறழாது இயங்குதற்குரிய தந்திரத்தை—உபாயத்தைத் தெரிவிப்பன். "இதுவே உறுதி" என்பன். [உறுதி என்பதே முத்திரை எனப்படுவது] "இஃதன்றி வேறு தடம் இல்லை. இவ் இயக்கத்தினாற்றான் நீ கரையேற வேண்டும். உழைத்தால் சுக மடைவாய்; சோம்பாதே" எனக் கூறியருளித் தூண்டுவன் முன்னிலையிற் குரு வடிவாய்ப் போந்த எம்பெருமான் என அறிக. பிருதுவி தத்துவமாகிய அயம் தன் அசுத்த நிறை சிறிது நீங்கிச் சிறிது தூய்மை பெற்ற இடம் இதுவே என அறிதற் பாற்று.

இவ்வாறு தூண்டப்பட்ட சீவன் மேலே கூறப்பட்ட அசைவினையுடைய அன்பு என்னும் தத்துவத்தால் அன்பு செய்வன். ["அன்பு" என்பதன் பண்பும் பயனும் "வித்தகம்" இல-33 இல் கூறப்பட்டன. ஆங்குக் காண்க.] இதனால் பெறப்படுவது யாது? அன்பு செய்வதற்கு மூல காரணம் அருளே என்பது. ஆயினும், அவ் ஆதி அருளால்—ஆதியாயுள்ள அவ் அருளால் அவ் அருளை அடையப் பெற்றான் ஒருவன் பெறுதற்குரிய பயன் இன்னது என வேதாகமங்களால் அறுதி செய்யப்பட்டனவற்றை அடைந்துவிட முடியுமோ? எனின், முடியாது என்றே கூறப்படும். என்னை காரணம் எனின், அவ் அருள் தனக்கு உரிய நிறையைப்பெற வேண்டும் என்பதே உத்தரமாகும். அஃதாவது அன்பின் வழியே சென்று அன்பு வடிவாக அன்போடு கரந்து—உறைந்து அதனால் அன்பு தனது உற்பத்தி ஸ்தானமாகிய பிருதிவியில் உறைந்து அதனால் அன்பும் சுத்தமடைந்து பிருதிவியும் சுத்தமடைந்து அருளாகிய தானும்— அருள் என்னும் இயக்கமாகிய வாயுவும் சுத்தமடைந்து பெறற்பாலதாகிய நிறையைப் பெற வேண்டும் என்பது. நிறை பெற்றுழிப் பெற்ற நிறைக்கு ஏற்பப் பொருள் தரும்—பயன் தரும் என்க. இதுதான் காந்தமும் அயமும் சமநிறை பெற்ற இடம் என அறிதற் பாற்று. இருவினையொப்பு மலபரிபாகம் வாய்ந்த இடமும் இதுவே. இப்பெற்றி வாய்ந்தவரே அருளாளர்—அருளை வாய்மையாக அடைந்தவர்—தமக்கு உரிமையாகப் பெற்றவர்—மெய்யடியார் என்க. இவரே தமது தூலம் விமலமாய் அமலமாய் (ஓ வடிவம்) — சூக்குமமாய் அருளாய் வெளியாய் உலகு கண்டிட மறைந்து உண்மை முத்தியடையும் தத்துவப் பெரியார் என அறிதற்பாற்று. இவ்வுண்மை நன்கு யாப்புறும் வண்ணம் இன்னும் சில கூறுதும்.

இயக்கம் நிறை பெறுவது என்றால் என்னை? இயக்கம் என்பது ஒலி—நாதம் எனப்படும். மேலே கூறியன எல்லாம் பஞ்ச பூதங்களால் ஆய இச் சரீரத்தின் நிலைமையையும் இதனால் அடையும் பேறு இன்னது என்பதனையும் நன்று தெரிக்கின்றன. "ஆதி அருள்" என்றால் என்னை? அது தான் "என்பரமல்லா இன்அருள்" என மணிவாசகனால் கூறப்பட்டது. (திருவாசகம் கோயிற்றிருப்பதிகம் செ. 2.) அருள் என்பவன் (தகப்பன்) அன்பு என்பவளோடு (தாய்) கூடிக் கூடிக் குழைந்தான். குழைந்து என்ன செய்தான்? மகனாகப் பிறந்தான். மகனும் அருள்தான். தகப்பனுக்கு முன் மகன் பிறந்தான் என்பது சமக்கினைப் பொருள். இவன் பிறந்ததனால் ஆம் பயன் என்னை? விருத்த தசையடைந்து—கிழப் பருவம் அடைந்து காலத்தால் அணு அணுவாக அரிக்கப்பட்ட பிருதிவியாகிய தாயும் ஆகாசமாகிய தகப்பனும் பேணப்பட்டார்கள்; "சிதலை இனப்பட்ட ஆலமரத்தை,

"மதலையாய் மற்றதன் வீழ் ஊன்றியாங்கு" (நாலடியார்) தாங்கள் பெற்ற மகனால் பேணப்பட்டார்கள் என்க.

"தந்தை தாய்ப் பேண்"

என்னும் ஔவை, திருமறையின் உண்மைப் பொருள் இதுவே என அறிதற்பாற்று. மகன் எனப் பிறந்தவன் பெற்ற தாயைக் கூடினதால்—கூடிக் குழைந்ததால் — சையோகம் செய்ததால் தாயைப்பேணினவன் ஆயினான். இவனே மாப்பிள்ளை — மா எனப் பூத்தவளைக் கூடிச் சுகிக்கும் பிள்ளை. அஞ்ஞான்று தந்தை தாய் ஆசியைப் பெற்றுத் தவத்துக்கு அருகனானான். வியாபகம் எனும் தமிழாய் இருந்த ஞான்று இரண்டு என விளங்கிற்று (தமிழுக்கு இருவர்). தாயைக் கூடி ஆசி பெற்றுத் தாயே தானாகி ஏகனாய்த் தவத்துக்கு ஒருவன் ஆனான். (தவத்துக்கு ஒருவர்). இவற்றின் திறம் அமயம் நேர்ந்துழி மேலும் விளக்கிக் கூறப்படும். தந்தை தாயார் "த்யாவாப் பிருதிவிகள்" என்பது இருக்கு வேதத்தால் அறியக்கிடக்கின்றது.[மண் 1 சூக். 161. செ.3 பார்க்க.] இதனைத்தான்—இவ் அரிய பெரிய உண்மையைத் தான் பலப்பல கற்பனாரூபமான தோத்திரங்களால்—ஆழ்ந்த கருத்துக்களை — உண்மைகளை உள்ளடக்கிய கௌண பதங்கள் அமைந்த பாக்களால் இருக்கு வேதம் முறையிட்டுக் கோலோச்சுகின்றது. இவ் அரிய பெரிய உண்மையை உணர்த்துதற்கன்றே பின் வரும் சூக்தங்கள் எழுந்தன என்பது.

இருக்கு

அஷ்டகம் 3. அத்தியாயம் 7.
மண்டலம் 4, அநுவாகம் 4, சூக்தம் 1
இருக்குக்கள் 11.

பதனழி தூணைப் போலப் படுத்துள பெற்
[றோர் தம்மை
இதமுற விளமை மீண்டு மெய்து றச்
[செய்த வாஜன்
சதமகன் றுணையுற்ற விப்புவா னிருபு
[ஹோம
மதுவினுக் களிப்போரெங்கள் மதத்தினை
[பராமரிக்க

(இ-ள்) ஜீரணமாய்க் கொண்டிருக்கும் தூணைப்போல படுத்திருந்த பெற்றோர்களை மறுபடியும் இளமைப் பருவத்தை அடையுமாறு செய்தவரும், ஸோமத்தை விரும்புவோரும், இந்திரனது துணையைப் பெற்றவர்களுமான ரிபு விப்வான் வாஜன் என்னும் மூவரும் எங்களது யக்ஞத்தை ரட்சிக்கட்டும். (எ—று)

ரூபா 15
நன்கொடை

எமது "வித்தக"த்தில் வெளிவரும் வேத உண்மைகளைச் செவ்வனம் ஆராய்ந்து உணரும் ஆற்றலும் காதலும் வாய்ந்த அறிஞரும், திருவாசகம், திருமந்திரம் முதலிய வேத உண்மைகள் எல்லாம் "வித்தக" வாயிலாக வெளிவரவேண்டும் என அதன் ஆக்கத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்து திருமுகவாயிலாக எம்மை ஊக்கி வருபவருமாகிய எவ்.எம்.எஸ். கொற்றாற் றிங்கி (F. M. S. Kotta Tinggi) ஸ்ரீமாந். டாக்டர். நா. சம்பந்த நாதன் (Dr. N. S. NATHAN) அவர்கள் "வித்தக" நன்கொடையாக ரூபா. **15** அனுப்பியுள்ளார்கள். இத்தகைய சிவப்பணியை ஊக்கி விடுதற்கேற்ற தூய உள்ளமும் வள்ளன்மையும் வாய்ந்து, "பகடிக்குப் பத்துக் காசு திருப்பாட்டுக்கு அரைக்காசு" என்னும் லௌகிகப் பழமொழியில் ஈடுபட்டு அவமாகாது யாவரும் ஈடேறும் வண்ணம் முன்மாதிரி காட்டி நிற்கும் உத்தமராகிய டாக்டர் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கத்தைச் சமர்ப்பிப்பதோடு, இவர்கள் எல்லா நலமும் பெற்று நீடு வாழும் வண்ணம் கயிலை முதற் குரவனாகிய புதுவை நந்தி பொன்னடித் துணைகளைப் போற்றுகின்றோம்.

[ப—ர்.]

மண்டலம் 4 அநுவாகம் 4 சூக்தம் 4.
இருக்குக்கள் 9.

வாசரெனு மிருபுவர்காள்! விபுவினர்காள்!
தேவரிடை வழங்கப்பெற்ற
தேசுடனீரிழைத்தவது, வயதாற்
பதனழிவை யுற்று நின்ற
மாசனராம் பெற்றோர்கள் மறுபடியு
மிளமையினை மருவித்தங்கள்
ஆசைவழிச் செலுமாறு திறமைகொடு
நீர்புரிந்த வாடலுனே.

(இ-ள்) வாஜர்களே! ரிபுக்களே! விப்புவர்களே! வயதின் முதிர்ச்சியால் ஜீரணத்தை அடைந்து நின்ற பெற்றோர்களாகிய பூமி வானங்கள் மறுபடியும் வாலிபத்தை அடைந்து தங்கள் இச்சைப்படி நடமாடுமாறு நீங்கள் செய்த செய்கையாகிய அது தேவர்களிடையே பிரக்யாதியாகப் புகலப்பெற்றது (எ—று)

ஏனைய பிரமாணங்கள் விரிவஞ்சி விடப்பட்டன. அமயம் நேர்ந்துழி எடுத்துக் காட்டி விளக்கப்படும். தாய் தகப்பன் என்னும் சொற்களால் முதலில் வாயுவும் அப்பும் குறிக்கப்பட்டன. இரண்டாவதாக வாயுவும் அக்கினியும் தூய்மை அடைந்து அஃதாவது அப்பு பிருதிவியிலும் வாயு ஆகாயத்திலும் நிறை பெற்றபோது நிறை ஒத்தபோது — சமப்பட்டபோது ஆகாயத்தை தகப்பன் என்றும் பிருதிவியைத் தாய் என்றும் குறிக்கப்பட்டது. ஆகாயமும் பிருதிவியுமே ஆதித் தாய் தந்தை — எம்பெருமான் வியாபக ரூபம். வேதங்கள் முறையிவேதும் அரிய பெரிய இரகசியமும் இதுவே.

திருவாசகம்

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே"
(வாழாப்பத்து செ. 1.)

என்பது மணிவாசககருதி அல்லவா? இன்னோரன்ன பிரமாணங்கள் பல. எடுத்துக் காட்டப் புகின் மிக விரியும். தத்துவப் பெரியார் அருளிய வேத நூல்களில் கண்டு தெளிக.

அருளை மழை என்ப. அருள் இன்றிப் பொருள் இல்லை. பொருள் என்னும் பொன் இல்லை. மாழை என்றால் பொன் அல்லவா? அதுவே மழை எனக்குறுகிற்றுப் போலும். அல்லதூஉம் உலவாக்கிழி என எடுக்க எடுக்கக் குறையாது எஞ்ஞான்றும் நிறைந்து நிற்றல் பற்றி மழை எனப்பட்டது எனினும் ஆம். "மழ பாடியுள் மாணிக்கமே" என்றான் சுந்தரம்—வெண்ணெய் ஊரில் அருள் துறையைக் கண்ட சுந்தரம்.

குறள்

அருளொடு மன்பொடும் வாராப் பொரு
[ளாக்கம்
புல்லார் புரள விடல்.

(ஷை 76 அதி-பொருள்செயல்வகை செ.5)

என்றனர் பொய்யில் புலவர்.

ஆதியான அருளும் அன்பும் ஒன்றுதலால் உளவாகாத அநித்தியமான பொருளின் ஆக்கத்தைப் பொருட்படுத்ாது கழிய விடுக என்பது இதன் பொருளாகும். எனவே அருளும் அன்பும் ஒன்றுதலால் உளவாகும் வாய்மையான பொருளையே பொருள் என்னும் பொன்னையே முயன்று அடையவேண்டும் எனக் கூறினாராயிற்று. இது தான் புகலிடம் கண்டு அடையப்படும் பொன்னெடுங்குன்றம். "பொன்னெடுங் குன்ற மொன்றுண்டு கண்டீர் இப் புகலிடத்தே" என்றனர் அப்பர். அருளையே மேகம் எனவும் மாரி எனவும் மழை எனவும் வேதம் முறையிடுகின்றது.

திருவாசகம்

"எஞ்சா வின்னருள் நுண் துளி கொள்ள
....
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க"
(ஷை–திருவண்டப் பகுதி).

திருமந்திரம்

"..
தானே மழைபொழிதையுமாய் நிற்கும்"
(ஷை சிறப்புப்பாயிரம் செ. 10).

இருக்கு

7—வது அத்தியாயம்
வருக்கம் 7.
மண்டலம் 2. அநுவாகம் 3, சூக்தம் 5,
இருக்குக்கள் 17.

இருவருமிசைந்தன்னுக்கியைவுறவிண்
[மழையைத்
தருகுவர்; சோபனத்த செல்வமார்தடை
[வன் சீரை
இருவகைத்தலமுங்கைக்கொண்டேகுவன்
[போருக்கன்றுத்
இருவகைப்பாதியுந்தந்நன்மைகளியைக்கு
[மன்றே

(இ-ள்) பூமி வானங்களாகிய இருவரும் ஒன்று கூடி அவ் யஜமானனுக்கு ஆகாசத்திலிருந்து மழை நீரைநிறைய அளிக்கின்றனர். சோபன செல்வத்தைப் பெற்று அவன் கீர்த்தியை அடைவான் தனது நிவாஸ ஸ்தலத்தைக் காப்பாற்றிக் கொண்டும் பகைவனது நிவாஸ ஸ்தலத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டும் அவன் யுத்தத்திற்குச் செல்லுகிறான். அவனுக்குப் பூமியாகிய பாதியும் விண்ணாகிய பாதியும் தங்கள் தங்கள் நன்மைகளை அளிக்கின்றன. (எ.—று.) விந்துவில் உள்ள நான்கு கலைகள் (நான் மறைகள்) இவ்விரண்டாக விண்ணிலும் மண்ணிலும் உறைதலாலாம் பேறே "இருவகைப் பாதியும் தம் நன்மைகள் அளிக்குமன்றே" என்பதனால் உணர்த்தப்பட்டது.

அஷ்டகம் 2, அத்தியாயம் 3.
வருக்கம் 18.
மண்டலம் 1, சூக்தம் 8, அநுவாகம் 22.

இருக்குக்கள் 52.

திவியெனைப்பெற்றதந்தை; சேர்ந்திடு
[நாபியீண்டே
புவிபெரும் பரப்பிற்றிலது தாயொடு முற
[வாய் நிற்கும்
விவிதமாய் விரிந்தபூவான் யோனியாமந்
[தரத்தில்
கவிபெறு பிதாப் பெண்கர்ப்பந் தங்குறச்
[சமைத்திட்டானே.

(இ-ள்) வானம் என்னைப் பெற்று வளர்க்கும் தந்தை யாம் (பூமியினது ரஸத்தினால் உணவுப் பொருளும் உணவுப் பொருள்களால் ரேதஸும், ரேதஸால் மனிதனும் உண்டாகிறார்கள் என்று சுருதி கூறுவதால்) எனக்கு நாபி அல்லது சுற்றமும் இங்கேயே உளர். விசாலமாகிய இப் பெரிய பூமி எனக்குத் தாயும் பந்துவுமாம். பாத்திரத்தைப் போல் விரிந்துள்ள பூமி வானங்களின் பிறப்பிடமாகிய அந்தரிட்சத்தில் விளக்கம் பொருந்திய பிதாவாகிய ஆதித்யன் அல்லது பரமேஸ்வரன், பெண்ணினது கருப்பமாகிய மழை நீரைத் தங்குமாறு செய்தான்.

இவ் இருக்குப் பிரமாணங்களால் "என்பரமல்லா இன்னருள்" எனப்படும் ஆதி அருளாகிய ஆகாயமும் அன்பு எனப்படும் பூமியும் ஒன்றுதலால் அருள் பிறத்தலும் அதுவே ப மழ — பெரும் செல்வம் — பொன் ன்பதும் நன்கு பெறப்படுதல் ண்டு கொள்க.

அருவாய் உள்ளாய் (அரு + உள் = அருள்) இருப்பது எதுவோ அது விரிவற்று வியாபகம் அற்றுச் சுருங்கினால்—ஒடுங்கினால் கரையற்ற செல்வம் ஆகிய பொன்னெடுங்குன்றம் காணப்படும் என ஔவை கூறியதும் அறிக.

ஔவை குறள்

கரையற்ற செல்வத்தைக் காணுங் காலத்
[தில்
உரையற் றிருப்ப துணர்வு.
(ஷை மெய்யகம் செ. 2.)

அருள் என்பது சத்தி. சத்தி என்பது கால். அதுவே வாயு. இச்சத்தியாகிய வாயு சரீரத்தில் பதிய வேண்டும். சத்தியின் கால்—பாதம் பதிதல்—சத்திபாதம் பதிதல்— சத்தி நி பாதம் என்பது இதுவே எனக. இப் பெற்றி கைவரப் பெற்றான்— சித்தி

பெற்ருல் குறைவு ஏது? குற்றம் ஏது? பாவம் ஏது ? தரித்திரம் ஏது ?

“கால்அந்தச்சத்திஅருள்என்பர்காரணம் ”

என்பது திருமந்திரம் (8-ம் தந்—அடிதலையறியும் திறம் கூறல் செ. 1.).

சத்தி என்னும் கால்—வாயு—இயக்கம்—ஒலி—நாதம் சரீரத்தில் சரீரமாகிய பிருதுவியில் உறைய வேண்டும். இயக்கம் எனும் நாதம்—ஒலிக்கும் நாதம் சரீரத்தில் உறைய உறைய—ஒடுங்க ஒடுங்கச் சரீரம் மாற்றமடையும் — அசுத்தம் நீங்கி அமலமடையும். நாதம் எனும் ஒலி முற்ருக ஆக்கமுற்று ஒடுங்கிய போது நாத சரீரமாகும். விந்தின் இயக்கமே நாதமாதலால் சரீரம் நாத சரீரம் ஆன போது விந்து என்றும் நாதம் என்றும் பிரித்துக்கூற இடமாகாது ஏகிபாவமாகும் — ஒன்ருகும் என்பது. இரண்டாய் இருந்தும் ஒன்றே. விவரிப்பதால் இரண்டு எனப்படும். நாதம் எனும் சத்திபதியப் பெற்று—சத்தி நிபாதம் பெற்றுத் தமது தூலம்அமலமடைந்த உண்மையையே—நித்தியத்துவம் பெற்ற உண்மையையே,

“நடனம் கண்டபோதே என்தன்
சடலஞ் செய்த பாக்கிய மையா”

என்பதனுல் அருளிச்செய்தனர் உடலுயிர் அமல மடைந்து உலகு கண்டிட மறைந்து உண்மை முத்தி யடைந்த எமது முத்துத்தாண்டவப்பெருமான் என அறிதற்பாற்று. அசைவு ஒலி நடனம் என்பன ஒன்றே என அறிக. இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்பனவற்றின் உண்மைப் பொருளை ஒரு சிறிதும் அறியாது சில கண்ட கொடிகளால் அவற்றை அடைந்து விட்டதாக — அடைந்து விடுவதாகக் கருதிப் படிப்பு வல்லபத்தால் அது அப்படி இது இப்படி என ஏது ஏதுவோ உழறிக் குழறிச் சாதலடைந்ததே—சாதலடைவதே உலகியலாயிற்று.

“அன்பு” என்னும் கட்டுரையில் (“வித்தகம்” இல, 32.) அப்பு உப்பாக வேண்டும் எனக் கூறப்பட்டது. உப்பு என்ருல் வாயுவையே குறிக்கின்றது. “வயிறு உப்பினது” என்ருல் வாயுவையே குறிக்கின்றது அல்லவா? அவ் உப்பு அருளாமோ? எனின், அற்றன்று. மற்று அவ் உப்பில் இருக்கும் ஏற்றத் தாழ்வுடைய வாயு—கைப்பு என்னும் துப்பு நீங்க வேண்டும். நீங்குவது எவ்வாறு ? எனின், அவ் உப்புக்கு இனமான உறுப்புக்களில் (உறு+உப்பு=உறுப்பு) அவ் ஏற்றத்தாழ்வான நிறை பஞ்சீகரணிக்கப்பட வேண்டும். உறுப்புக்களில் உப்பு என்னும் வாயு நிறைபெருமையால் அவை நாளுக்கு நாள் அணு அணுவாய் அழுகிச் சாதலடைகின்றன. அவற்றிலுள்ள சுத்த அணுக்கள் சாதலடைகின்றன என்க. அவ்வாயு நிறை பேறுவதே—அமலமடைவதே விந்துவின் கலை பிருதிவியில் உறைவது என்பதன் பொருளாகும்.

ஆதி அருளால் “என்பரம் அல்லா இன் அருளால்” அன்பு பெருக்குற்று—விளைவேறி அன்பு எனும் அப்பு உப்பானுல்—உப்பெனும் சிவமானுல் அதுவே அருளாகும். அவ் அருள் எனும் தத்துவம் விளைவேற வேண்டாவோ? எனின், பதிந்த—உறைந்த அருட்சத்தி—களிம்பு நீங்கியதால் (பளிங்கில் பதிந்த பவளம்) விளைவேற வேண்டும் என்றே கூறப்படும். சத்தி பதிந்த ஞான்று அருள் என்னும் தத்துவம் முளைத்துக் கால் கொண்டது ; உப்பு என்னும் சிவத்தில் அடங்கியிருந்து — அக்கினியில் சூடு போலக் கலந்திருந்து விச்ரும்பித்தற்கு—விரிதற்குக் கால் கொண்டது என்க. ஆதலால் அது காரியப்பட்டு விளைவேறி விரிந்து “உற்ற ஆக்கையின் உறுபொருள்” ஆகிய ஓ வடிவம் பெறவேண்டும் அல்லவா? அவ் ஓ வடிவமே ஞான சத்தி—ஞான சத்தி வடிவம் என்க. இந்த வடிவம் பெறுவதற்கு இன்றியமையாச் சாதகம் ஒன்று இருக்க வேண்டும் அல்லவா ? அது தான் பொருள். பொருள் தான் தாது. அது “ ஓஜம் ” ஆதல் வேண்டும். (ஓஜம்=ஓ வடிவின் பிறப்பிடம் எனப்படும்) அதுவே ஆசான். அதுவே அமுதம்; சரீரத்தில் உறைந்து அமுதமாவது. அதனைக் கண்டு உண்டால் அவ் அருவமான இயக்கம் எனும் சூக்கும கற்பமாகிய ஒலி—ஒலிமயமான அருட் குருவான சூக்கும வடிவம் (ஓ வடிவம்) என்னும் ஆசான் கட்புலனுக்கு உருவாய்ப் பரிசத்துக்கு அருவாய்த் தோன்றும்படி பொருள் என்னும் செவிலித் தாயால் வளர்க்கப்பட்டு உருப்பெறுகின்ருன்—சூக்கும உருப்பெறுகின்ருன் என அறிதல் வேண்டும். வேத உண்மை இதுவே என அறிதற் பாற்று.

குறள்

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

(ஷை பொருள் செயல்வகை, செ. 7.)

என்பது செக்காப்புலவன் திருவாக்கு. ஆ! ஆ! என்ன அருமை! என்ன பெருமை! எத்துணையோ அரிய பெரிய வேத உண்மைகளையெல்லாம் தன்னுள் அடக்கி மிளிரும் இக்குறட்பாவின் மாண்பு தான் என்னே! பொய்யில் புலவன் புகழ் போல மிளிர்கின்றது இக்குறட்பா என்பதும் மிகையாகுமா? உண்மையின் இருப்பு எங்கே? உலகோர் பெற்றி என்னே! “அருள்” “அருள்” என்று வாய்ப் பேச்சாக இருக்கிறதே யன்றி உண்மையை அறிவது என்ருல் அஃது எளிதின் முடியும் காரியமாகுமா? மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் அருளின் பண்பும் பயனும் ஒருவாறு உணரத்தகும்.

உண்மை இவ்வாறு இருக்கின்றது! உலகம் ஒருவாறு இருக்கின்றது! “வித்தகம்” இவ்வாறு ஒலிக்கின்றது! சுகமடைபவர் அடையட்டும் ! அவமுடையவர் அகலட்டும்.

(சுபம்.)

ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்

வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(32-ம் வாரத் தொடர்ச்சி).

சந்திரசேகர பண்டிதர்

இவர் ஏறக்குறைய நூற்றெழுபத்தைந்து வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த ஆதி சைவப் பிராமண குலத்தவராகிய நாராயண பட்டர் என்பவருடைய புத்திரர். இலக்கிய இலக்கணங்களிற் சிறந்த பண்டிதர். பழைய கவிகள் போலப் பாடுவதிற் சாமர்த்தியம் வாய்ந்தவர். நல்லூர்க் கந்தசாமி மீது ஒரு கிள்ளைவிடு தூது பாடியிருக்கின்றார். அது, கருணைவாய் என்னுமூரில் இருந்த வடமொழி தென்மொழி என்னும் இருமொழியினும் புலமை படைத்த ஸ்ரீ. கை. நமச்சிவாய தேசிகர் என்பவரால் சென்ற இரத்தாட்சி வருடத்து ஆனி மாதத்திலே அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அந்நூலின் சிறப்புப் பாயிரத்தினலே அந்நூலியற்றப்பட்ட ஆண்டு முதலியன அறியலாகும், ஆதலின் அதனை இங்கே தருகின்றாம்.

சிறப்புப்பாயிரம்

ஆசிரிய விருத்தம்

சீர் செறி சகவாண் டாயிரத் தெழுநூற்
றெட்டனைச் செறிந்திட விரவும்
பேர் பெற மருவும் பாரபவ வருடம்
பிறங்கு தை மதியிரு பத்தோ
டேர்தரு மொன்பான் றிகதிபொன் வார
மிசைத்திடுஞ் சோதிநாளிதனிற்
சார்தரு நல்லூர் முருகவே ளருளாற்
றருங்கிளித் தூது சொன் னதுவே.

கட்டளைக் கலித்துறை.

செந்நெற் பழனத்திருநல்லை வேன்முரு கேசருக்கு
வன்னப் பசுங்கிளித் தூதுரைத் தான்சது மாமறைதே
ரன்னத் தவனிகர் நாரா யணனரு ளாலுதித்தோன்
பன்னத் தருபுகழ்ச் சந்திர சேகர பண்டிதனே.

இனி, இவரது கவித்திறமுணர்தற்காக அந்நூலின் காப்புச் செய்யுளையும் இங்கே தருதும்:—

வெண்பா

விந்தைசெறி நல்லூர் விரும்பியுறுங் கந்தன்பாற்
சுந்தரஞ்சேர் கிள்ளைவிடு தூதுக்குத்—தந்தவிசைச்
சிராம்ப லானனத்தான் சிந்திக்கு மோர்கோட்டுக்
காரம்ப லானனத்தான் காப்பு.

ஆம்பலான்—வேய்ங்குழலையுடைய விஷ்ணு.
கார் ஆம்பல்—கரிய யானை.

(தொடரும்)

"வித்தகம்."

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

"வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 0—8—0
கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0
☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

சுத்தசாதகம் விலை அணு 2.
திருவாசக உண்மை விலை அணு 2.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

Sandhanam Printing Works. Pondicherry. Le Gérant, R. Nagarattinam